செ. கு. எண்:047 நாள் :24.07.2015

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 24.7.2015

அரியலூர் மாவட்டம், செந்துறை வட்டம், அரியலூர் பிரிவு தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் மஸ்தூரராகப் பணி புரிந்து வந்த திரு. ராஜவேல் அவர்கள் 18.4.2015 அன்று சன்னாசிநல்லூர் கிராமம், கீழபெரம்பலூரில் மின்கம்பத்தில் ஏறி பழுது பார்க்கும் பணியை மேற்கொண்டிருந்த போது மின்சாரம் தாக்கியதில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 11.5.2015 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தருமபுரி மாவட்டம், தருமபுரி வட்டம், நல்லம்பள்ளி பிரிவு தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் மின்கம்பியாளராகப் பணி புரிந்து வந்த திரு. அனுமந்தன் அவர்கள் 7.5.2015 அன்று போலன அள்ளி தரப்பு எள்ளுக்குழி கிராமம் அருகே மின் இணைப்பு பணியினை மேற்கொண்டிருந்த போது மின்சாரம் தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;.

வேலூர் மாவட்டம், காட்பாடி பிரிவு தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் களப் பணியாளராக பணிபுரிந்து வந்த கொத்தமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த திரு. அசோகன் அவர்கள் 14.5.2015 அன்று வடுகந்தாங்கல் பகுதியில் மின் இணைப்பு பணியினை மேற்கொண்டிருந்த போது மின்சாரம் தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

வேலூர் மாவட்டம், அரக்கோணம் வட்டம், பனப்பாக்கம் பிரிவு தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் கள உதவியாளராகப் பணி புரிந்து வந்த திரு. வேலாயுதம் அவர்கள் 29.5.2015 அன்று கர்ணாவூர் கிராமத்தில் மின்கம்பத்தில் ஏறி பழுது பார்க்கும் பணியினை மேற்கொண்டிருந்த போது தவறி கீழே விழுந்ததில் பலத்த காயமடைந்து மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தர்மபுரி மாவட்டம், தருமபுரி மின் பகிர்மான வட்டம், வேப்பிலைப்பட்டி பிரிவு தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் கள உதவியாளராகப் பணி புரிந்து வந்த திரு. முருகேசன் அவர்கள் 1.6.2015 அன்று வி.முத்தம்பட்டி துணை மின் நிலைய வளாகத்தில் மின் பராமரிப்புப் பணியை மேற்கொண்டிருந்த போது மின்சாரம் தாக்கியதில் மயக்கமடைந்து மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவங்களில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**